# Intelligence Information and the Failure of the Freedom Struggle as Known Through the Novel 1801

**T. Anitha**
*Registration No.: 23213154022022*
*Full Time - Ph.D Scholar, Department of Tamil*
*S. T. Hindu College, Nagercoil*
*Affiliated with Manonmaniam Sundaranar University, Abhishekapatti, Tirunelveli*

**Dr. G. Nageshwari**
*Assistant Professor, Department of Tamil*
*S. T. Hindu College, Nagercoil*
*Affiliated with Manonmaniam Sundaranar University, Abhishekapatti, Tirunelveli*

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: அக்டோபர்**

**வருடம்: 2025**

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17255864

**Abstract**
*All human beings born on the earth desire to live based on their own ideas. If any event occurs contrary to that desire, they fight to protect themselves as much as they can. Similarly, people who did not want to live as slaves to foreigners in their own country, fought a war of rights against the British in order to establish their rights. Some of the participants in this war were divided by the intrigues of the British and eventually forgot their sense of freedom and, wanting position and money, showed the war equipment of their countrymen to foreigners and gave information about the war situation. This research article examines the situation and the decline of the first liberation struggle that occurred as a result.*
***Keywords:*** *Struggle, Intelligence, War Casualties, Death*

**References**
1. Ramakrishnan, Ra. - History and Culture of Dharmapuri, G-4, Shanthi Apartments, Srikrishnapuram Street, Royapettah, Chennai - 600014, Ramaiya Publications, First Edition - 2008.
2. Kamar, S.M. - The Heroes Maruthu Pandiyar, First Edition - October 1989, Published by Kavya, 16, Second Cross Street, Trustpuram, Kodambakkam, Chennai - 600024.
3. Sanjeevi, N. - Maruthu Pandiyar Who Protected Honor, First Edition - August 2004, Published by Kavya, 16, Second Cross Street, Trustpuram, Kodambakkam, Chennai - 600024.
4. Sanjeevi, N., Krishnasanjeevi - Caldwell's History of Tirunelveli (Translated work), First Edition - December 2004, Published by Kavya, 16, Second Cross Street, Trustpuram, Kodambakkam, Chennai - 600024.
5. Shanmugasundaram, Su. - Kavya Tamil Research Journal, October 2022 - March 2023, Arts, Literature, and Cultural Quarterly, ISSN-2277-922.
6. Parthasarathi, Na. - Historical Short Stories, First Edition - 2016, Seethai Publications, 4/7, Raja Anumantha Street, Triplicane, Chennai - 05, ISBN - 978-93-82689-62-1.
7. Rajendran, Mu. - 1801, Agani Publications, First Edition - December 2016.

# 1801 நாவல் வழி அறியப்படும் உளவுத் தகவலும் விடுதலைப் போராட்ட வீழ்ச்சியும்

***து. அனிதா***
பதிவு எண் -23213154022022
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்க்கலை ஆய்வகம்
தெ.தி இந்துக் கல்லூரி, நாகர்கோவில்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது
அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி

***முனைவர் க. நாகேஸ்வரி***
உதவிப் பேராசிரியர், தமிழ்க்கலை ஆய்வகம்
தெ.தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது
அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி

***ஆய்வுச் சுருக்கம்***
*மண்ணில் பிறந்த அனைத்து மனிதர்களும் தங்களின் எண்ணத்தின் அடிப்படையில் வாழ்வதற்கு விருப்பம் கொள்கின்றனர். அவ்விருப்பத்திற்கு மாறாக ஏதேனும் ஒரு நிகழ்வு ஏற்படுமாயின் தன்னால் முயன்ற அளவு தன் சுயத்தை காக்க போராடுகின்றனர். இதனைப் போன்று தங்கள் சொந்த நாட்டில் வேற்று நாட்டவரிடம் அடிமைப்பட்டு வாழ விருப்பம் கொள்ளாத மக்கள், தங்களின் உரிமையை நிலை நிறுத்திக் கொள்வதற்காக ஆங்கிலேயர்களுக்கு எதிராக முதன் முதலாக தங்களின் எதிர்ப்பு குரலை ஒருமித்து வெளிப்படுத்தும் விதமாக உரிமைப்போர் புரிந்தனர். இப்போரில் பங்கேற்ற சிலர் ஆங்கிலேயர்களின் சூழ்ச்சியினால் பிளவு பட்டு இறுதியில் தங்களின் விடுதலை உணர்வை மறந்து பதவியின் மீதும், பணத்தின் மீதும் விருப்பம் கொண்டு தன் நாட்டு வீரர்களின் போர் தளவாடங்களை அயல் நாட்டவரிடம் காட்டி கொடுத்தும், போரின் சூழல் பற்றிய உழவுத் தகவல்களை கூறியும் அதன் விளைவாக ஏற்பட்ட முதல் விடுதலைப் போராட்ட வீழ்ச்சி நிலையை இந்த ஆய்வுக் கட்டுரையானது எடுத்து இயம்புகின்றது.*
***குறிப்புச் சொற்கள்:*** *போராட்டம், உளவுத் தகவல், போரின் வீழ்ச்சி, மரணம்.*

## முன்னுரை

ஒரு மனிதனை தன்னிச்சையாக செயல் படவிடாமல் மற்றொருவரின் சுய விருப்பத்திற்கு ஏற்ப இயங்கச் செய்வதினால் அம்மனிதனின் ஆழ்மனதில் தனக்கான சுதந்திரம் தாகம் எழுதுகின்றது. இவ்வகையான சிந்தனையானது ஒரு மனிதனுக்கு மட்டுமல்லாமல் பல மனிதர்களுக்கு ஏற்படுமாயின், அம்மனிதர்கள் அனைவரும் ஒன்று கூடிதங்களுக்கான விடுதலையே மீட்கும் பொருட்டு தன் மீது அவர்களின் கருத்துக்களை திணிக்கும் தனி நபரையோ, ஒரு குறிப்பிட்ட சமூகத்தையோ, அல்லது ஒரு இயக்கத்தையோ எதிர்த்து போரிடுகின்றனர். அதில் வீரமும் விவேகமும் பொருந்தியவன் தலைவனாக்கப் படுகின்றான். மீதமுள்ளவர்கள் அவன் சொற்படி போரிடும் சிப்பாய்கள் ஆகின்றனர்.

இவ்வாறு *1801*ஆம் ஆண்டு காளையார் கோயில் காடுகளில் மருதுப் பாண்டியர்களின் தலைமையில் சுமார்

ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் ஒன்றிணைந்து ஆங்கிலேயர்களுக்கு எதிராக நடத்திய கொரில்லா போர் முறையானது வரலாற்று சிறப்பு மிக்கதாகக் கருதப் படுகின்றது. இப்போர்நிகழ்ந்ததன்காரணம், போரின் தனிச்சிறப்பு, ஆங்கிலேயர்களின் கைப்பாவைகளாக மாறிய உள்ளூர் அரசர்கள், போரின் வீழ்ச்சி, வீரர்களின் மரணம், ஆகியவை இவ்வாய்வுக் கட்டுரையின் வாயிலாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

### போருக்கான காரணம்

பாரதநாட்டின்உடைமைகளைஅடைய நினைத்த ஆங்கிலேய அதிகாரிகளை எதிர்த்து, தென்னிந்திய வீரர்கள் தங்களுடைய உரிமையை நிலை நிறுத்த எண்ணியதே போருக்கான காரணமாக அமைகின்றது. கடல் தாண்டி வந்தவர்களை எதிர்த்து, முதல் குரல் குலித்தது நம் தென்னகத்தில் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாக கருதப் படுகின்றது.

ஆங்கிலேயர்களின் அடக்குமுறையை தனி ஒருவனாக எதிர்த்த முதல் மன்னன் நெற்கட்டான் செவ்வல் கோட்டையை ஆட்சி புரிந்த பூலித்தேவன் ஆவார். 1750 முதல் 1767 வரையிலான பதினேழு ஆண்டுகள் தொடர்ச்சியாக ஆங்கிலேயர்களை எதிர்த்து தன் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியை சிறந்த முறையில் அரசாட்சி செய்து வந்தவர்.

**“இந்திய விடுதலைப் போரின் முதல் போராளி பூலித்தேவன்”**

என்று சு.சண்முகசுந்தரம் குறிப்பிடுகின்றார்.

**(ப.எ-5, காவ்யா தமிழ் ஆய்விதழ்)**

இவரைத் தொடர்ந்து ஆங்கிலேயர்களுக்கு சிம்ம சொப்பனமாகக் காணப்பட்டவர் திப்பு சுல்தான். இவர் ஆங்கில அதிகாரிகளிடம் போரிட்டு ஜெனரல் மேத்யூஸ்ஸிற்கு மரண தண்டனை கொடுத்தவர்.

1801 நாவலில் இக்கருத்தானது இடம் பெற்றுள்ளது, “மைசூர் புலி என அழைக்கப் பட்ட திப்பு தானே வெள்ளையனை கொல்வது போன்று நினைத்து இந்த பொம்மையைஉருவாக்கியதாகஆங்கிலேயர்கள் கருதி பெரும் சினம் கொண்டனர்” (ப.எ-536)

இந்த கருத்திற்கு மேலும் வலுசேர்க்கும் விதமாக தேச பக்தர் ம.பொ. சிவஞானம் கூற்றை, இரா. ராமகிருஷ்ணன் மேற்கோளிட்டு குறிப்பிட்டுள்ளார். “இருளைக் கிழித்துக் கொண்டு எழும் உதய ஞாயிறாக ஆங்கிலேர் ஆதிக்கத்தை எதிர்ப்பதற்குத் தென்னகத்தில் தோன்றிய மாவீரர்கள் ஐதரும் திப்புவும்” (தகடூர் வரலாறும் பண்பாடும், ப.எ-334)

இவர்களுக்கு அடுத்த நிலையில் பாஞ்சாலங் குறிச்சியின் பாளைய காரரான வீரப் பாண்டிய கட்ட பொம்மன் 1798 ஆம் ஆண்டு கலெக்டர் ஜாக்சனை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தும் வேளையில் தவறுதலாக ஆங்கிலேயத் தளபதி லெப்டி னென்ட் கிளார்க்கை கொன்றார். இதனால் கோபமடைந்த ஆங்கிலேயர்கள் கட்ட பொம்மன் மீது போர் தொடுத்தனர். இப்போரில் தோல்வியடைந்த கட்ட பொம்மன் காளாப்பூர் காடுகளில் மறைந்திருந்த வேளையில், புதுக்கோட்டை அரசன் தொண்டைமானின் உதவியுடன் ஆங்கிலேயர்கள் இவரை தூக்கு மேடை ஏற்றினார். பின் இவரது தம்பியான சிவத்தையா மற்றும் ஊமைத்துரை உட்பட பதினேழு புரட்சியாளர்களை பாளையங் கோட்டை சிறையில் அடைத்தனர். இவர்கள் அனைவரையும் மீட்டெடுக்கும் பொருட்டு சின்ன மருதுபாண்டியர் தலைமையில் இருநூறு புரட்சியாளர்கள் பாளையங்கோட்டை சிறைக்குள் புகுந்து வீரர்களை மீட்டனர்.

இந்நிகழ்வானது 1801 நாவலில், “போர் முனையில் தளபதி இல்லாமல் போரிட நேர்ந்து விட்ட வீரர்களைப் போல் அவர்கள் இருந்தாலும், இலக்கை நோக்கி சரியாகபாயும் அம்புகளை போல் எல்லோரும் ஒரு திசையை நோக்கி பாய்ந்தனர். சிறைச் சாலையை விட்டு ஊர் எல்லை வரை ஓடி வந்தனர்”. (ப.எ-249) என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சரித்திர சிறுகதைகள் என்னும் நூலில், “கால் நாழிகை நேரத்தில் சிறைக் கதவு உடைக்கப்பட்டு விட்டன. ஊமைதுரை முதலியவர்கள் வெளியேறினார்” என்று நா. பார்த்தசாரதி குறிப்பிட்டுள்ளார். (ப.எ - 225)

இவ்வாறு தனது உரிமையை நிலை நாட்ட எண்ணிய வீரர்கள் பல இன்னல்களை அனுபவித்து மீண்டும் ஒன்றிணைந்து சிறப்பு பொருந்திய போர் உக்தியை உருவாகி ஆங்கிலேயர்களை வீழ்த்தும் எண்ணம் கொண்டிருந்தனர்.

## போரின் சிறப்பு

ஆங்கிலேயர்களுடன் தனித்தனியாக போரிட்டு மரணம் தழுவிய வீரர்களை மனதார வணங்கி புரட்சி வீரர்கள் தங்களின் சொந்த மண்ணிலிருந்து ஆங்கிலேயர்களை அகற்ற விரும்பி அனைவரும் ஒன்றிணைந்து ஆங்கிலேயர்களை எதிர்த்தனர். அவ்வாறு அவர்கள் ஆங்கிலேயப் படைகளை எதிர்ப்பதற்காக மருது சகோதரர்களின் தலைமையில் பூனா முதல் நாங்கு நேரிவரையிலான சுமார் ஆயிரத்திற்கு அதிகமான வீரர்கள் தேர்வு செய்த இடம் காளையார் கோயில் காடாகும். இப்பகுதி சிவகங்கை மாவட்டத்திற்கு உட்பட்டதாகும்.

புரட்சியாளர்கள் காடுகளை தேர்வு செய்த தன் காரணம் காடுகள் அடர்த்தியான மரம், செடி, கொடிகளை கொண்டி இருப்பதாலும் வனவிலங்குகள் அதிகமாகக் காணப்படுவதாலும் ஆகும். ஏனெனில் ஆங்கிலேயர்கள் காட்டினுள் உள்ளூர் நபர்களின் உதவி இல்லாமல் வர முடியாது. இதன் காரணமாக ஆங்கிலேயர்களை எளிதில் விழித்து விடமுடியும் என்ற எண்ணம் கொண்டிருந்தனர். மேலும் கொரில்லா முறைப்படி ஆங்கிலேயர்களை தாக்க வீரர்கள் முடிவு செய்தனர்.

1801 நாவலில் இக்கருத்திற்கு வலு சேர்க்கும் விதமாக, “இது ஒரு வித்தியாசமான போர்க்களம். காட்டுக்குள் வெளிச்சம் குறைவு. மிக நெருக்கமான காடு. எதிரி நம் அருகே வரும் வரை நம் கண்ணுக்கு தெரிய மாட்டான். கண்களை விட காது களுக்கு வேலை கொடுக்கும் போர். சிறு சத்தம் வந்தாலும் அதை உதாசீனப்படுத்தக் கூடாது. கவனமாக இருக்க வேண்டும். காட்டுக்குள் பேச்சை விட்டு விட்டு சைகை களை பயன்படுத்த வேண்டும்”. (ப.எ - 401) என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆங்கிலேயர்களின் உள்ளூர்கைப் பாவைகள்

காளையார் கோயில் காடுகளில் நடைபெற்ற போரில் ஆங்கிலேயர்கள் பின்னடைவை சந்தித்ததினால் ஆங்கிலேயர்கள் உயிர்ப் பயம் கொண்டு திரும்பிச் செல்லும் எண்ணம் கொண்டனர். இக்கருத்தை வலுசேர்க்கும் விதமாக அக்காலக் கட்டத்தில் போரில் ஈடுபட்ட ஜெனரல் வெல்ஷ் என்பவர் தனது சுயசரிதையில் குறிப்பிட்டிருந்ததாக கால்டு வெல் நினைவு கூறுவதாக, சஞ்சீவி, கிருட்டினா சஞ்சீவி ஆகியோர் தனது நூலில் குறிப்பிட்டுள்ளனர். “இன்று ஆகஸ்ட் 30 ஆம் தேதி சிறு வயல் பக்கத்தில் இருந்து காளையார் கோயிலை அடையச் செய்த முயற்சிகளை கைவிடும்படி தீர்மானிக்கப்பட்டது. இதை கேட்டவுடன் எங்கள் வீர நண்பர்கள் பலரின் இடுகாடாய் அமைந்த அந்த இடத்தை விட்டு செல்ல நாங்கள் ஒரு மனதாய் பெரு மகிழ்ச்சி எய்தினோம்” (கால்டுவெல் திருநெல்வேலி சரித்திரம், ப.எ-354)

இக்கருத்தானது 1801 நாவலில் “கொரில்லா முறையில் திடீர் திடீரென தாக்கு தலை நடத்தினர். ஆங்கிலேயப் படை வீரர்களின் பிணங்கள் மட்டுமே காட்டின் பாதைகளில் கிடந்தன. பீரங்கிகளையும், வெடி மருந்துகளையும், துப்பாக்கிகளையும் வைத்துக் கொண்டு எதிரிகளை கண்ணில் பார்க்க முடியாமல் திணறிக் கொண்டிருந்தனர். இரண்டாயிரம் சிப்பாய்கள் கொண்ட படையில் தினம் தினம் சிப்பாய்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்தது”(ப.எ-421) என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

காளையார் கோயில் காடுகளில் நடை பெற்ற போரில் சிவகங்கை அரசர்

வேங்கை பெரிய உடையண தேவன், மருது சகோதரர்கள், ஊமைதுரை, சிவத்தையா போன்ற பல போராளிகள் பங்கேற்றனர். இதில் உள்ளூர் அரசர்களின் உதவியை நாடுவது என்று ஆங்கிலேயப் படைக்கு தலைமை பொறுப் பேற்றிருந்த கர்னல் அக்கினியூ முடிவெடுத்தான். அதன்படி புதுக்கோட்டை அரசனின் உதவியைப் பெற்று சிறந்த காடுவெட்டி மூலம் காளையார் கோயில் காட்டை அழிக்க முற்பட்டான்.

புதுக்கோட்டை அரசனான தொண்டை மான் ஆங்கிலேயர்களுக்கு காளையார் கோயில் காட்டை அழிக்க சிறந்த காடு வெட்டிகளை அனுப்பியதோடு மட்டும் நின்று விடாமல் காளையார் கோயில் காட்டில் நடை பெற்றுக் கொண்டிருந்த போரின் தள வாடங்கள் எங்குள்ளன, போரின் பலவீனமான திசை என்ன என்பது குறித்த தகவலையும் கூறினான்.

இக்கருத்தானது, *1801* நாவலில், "காளையார்கோயில்காட்டைநன்குஅறிந்த புதுக்கோட்டை அரசன் தொண்டைமான் கர்னல் அக்கினியூவிற்கு ஒரு முக்கிய செய்தி ஒன்றை அனுப்பினான். லெப்டி னென்ட்கர்னல் அக்கினியூ அவர்களே நீங்கள் காளையார் கோயில் காட்டில் மேற்கிலிருந்து தாக்குதலை தொடுப்பீர்கள் என்று மருது நினைக்கிறார். அதற்காக அத் தியாவசிய பண்டங்கள், தானியங்கள், படைத்தள வாடங்கள், வெடிமருந்து, விலைமதிப்பு மிக்க பொருட்கள், மனைவி, மக்கள், உறவினர்கள் என அனைத்தையும் காளையார் கோயிலின் கிழக்கு மற்றும் வட கிழக்கு பகுதிகளில் உள்ள காடுகளில் மருது மறைத்து வைத்துள்ளார்" *(ப.எ-422)* என்று கூறுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கருத்தானது, மாவீரர் மருது பாண்டியர் எனும் நூலில், "புதுக்கோட்டை தொண்டைமானும், அக்கினியூவும், ஒய்யாத்தே வரும் தயாரித்த கூட்டுத் திட்டம், கிளர்ச்சிக்காரர்கள் வியப்படைய செய்யும் வகையில் நான்கு புறமும் சூழ்ந்து மடக்குவதுடன் அவர்கள் கிழக்கு, வடக்குப் பகுதி காடுகளில் ஒளித்து வைத்துள்ள இரகசிய ஆயுதச் சேமிப்புகளில் இருந்து மேலுதவி கிடைக்காமல் தடுப்பது என்பது தான்". *(ப.எ-149)* என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

இவ்வாறு வீரர்கள் காடுகளை நம்பி தன் உரிமைகளை மீட்டெடுக்க போரிடும் வேளையில், உள்ளூர் அரசர்களே, அயல் நாட்டவரிடம் கைப்பவைகளாக கைகோர்த்து முதுகில் குத்திய நிகழ்வு முதல் சுதந்திரப் போரில் ஒரு கருப்பு சரித்திரமாக உள்ளது.

### போரின் வீழ்ச்சி

ஆங்கிலேயர்களுக்கு, உள்ளூர் அரசன் போர் தளவாடம் பற்றிய உளவுத் தகவலை பரிமாற்றம் செய்ததன் விளைவாக புரட்சியாளர்கள் சற்று தடுமாறினார். இதனை கருத்தில் கொண்ட ஆங்கிலேயர்களின் படைத்தலைவனான அக்கினியூ புரட்சியாளர்களை பிடித்து தருபவர்களுக்கு பரிசு தொகை அளிப்பதாக கூறினான். இத்தகவலை உள்ளூர் அரசர்கள் மக்களிடம் சேர்த்தனர் . அது மட்டுமல்லாது மக்களை சாதிவாரியாக பிரிக்க எண்ணிய அக்கினியூ, அரசர் வேங்கை பெரிய உடையண தேவனை அரசர் பதவியில் இருந்து நீக்கி மருது பாண்டியர்களுக்கு எதிரான கௌரிவல்லபரை 'இஸ்திமிரர்' என்ற புதிய பதவியில் நியமித்தான். இதன் காரணமாக மக்கள் சாதி வாரியாக பிளவுப்பட்டு, மருது சகோதரர்கள் பக்கம் இருந்த கௌரி வல்லபரின் சாதியினர் தனியாகப் பிரிந்தனர். இதன் காரணமாக போரின் சூழல் மாறத் தொடங்கியது. மேலும், புரட்சியாளர் இடையே ஒரு பண ஆசை பிடித்தவனை கண்டுபிடிக்க திட்டம் தீட்டினார் அக்கினியூ. அதற்கு உதவியவன் சின்ன மருதுவின் தோழனான ஆங்கிலேய பொறியாளர் மேஜர் ஜேம்ஸ் வெல்ஷ். இவனது ஆலோசனைப்படி

மருது சகோதரர்களுக்கு பல உதவிகளை செய்வதற்காக கருத்தான் என்பவன் பணிய மர்த்தப்பட்டிருந்தான். அவனிடம் பண ஆசை காண்பிக்கப்பட்டு சூழ்ச்சி மூலம் மருது சகோதரர்களை சிறைபிடித் தான் கர்னல் அக்கினியூ. சில முக்கிய புரட்சியாளர்களை தொண்டைமானின் படைகள் ஆங்கிலேயரிடம் பிடித்துக் கொடுத்தனர்.

1801 நாவலில், "லச்சியத்தை அடைய நாங்கள் இங்கிலாந்தில் இருந்து போர் பயிற்சி எடுத்துக் கொண்டு வர வேண்டியது இல்லை. சில சலுகைகளும், கொஞ்சம் சி ல்லறையும் இருந்தால் போதும். உன்னை போன்ற, சின்ன மருது போன்ற வீரர்களை எங்களால் சாய்த்து விட முடியும்"(ப.எ-462) என்ற கருத்து அமைந்துள்ளது.

**வீரர்களின் மரணம்**

சூழ்ச்சியினால் ஆங்கிலேயர்களிடம் பிடிபட்ட புரட்சியாளர்களில் அரசர் வேங்கை பெரிய உடையண தேவன், சின்ன மருதுவின் பன்னிரண்டு வயது மகன் துரைசாமி உட்பட எழுபத்தி மூன்று பேர் காலா பாணியாக நாடு கடத்தப் பட்டனர். மருது சகோதரர்கள் உட்பட இருநூறுக்கும் அதிகமானவர்கள் ஒரே நாளில் பனை மரங்களில் கர்னல் அக்கினியூவால் தூக்கிலேற்றப்பட்டனர். தூக்குமேடையில் இருந்தும் எந்த வீரனும் ஆங்கிலேயரிடம் உயிர் பயம் வேண்டி தலை வணங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். மருது சகோதரர்களின் வீர நிலையை பறை சாற்றும் விதமாக 1801 நாவலில்,

"உங்களுடைய ஜாக்கொடி அதிகார வெறியில் ஏற்றப்பட்டது. எங்களுடையது விடுதலையின் வேட்கையுடன் ஏற்பட்டவை" (ப.எ-461) என்ற கருத்து இறக்கும் தருவாயில் பெரிய மருதுவின் கூற்றாக அமைகின்றது.

இக்கருத்துக்களை அடியொற்றி மானங்காத்த மருது பாண்டியர் என்னும் நூலில், "மருது சகோதரர்களை, ஊமைது ரையை, சின்னமருதுவின் வீரமகன்களான சிவஞானத்தை, பச்சிளம் பாலகனான துரைசாமியைக் கைது செய்வதோடு விட் டதா கொலைக்காரகம் பெனிவர்க்கம்! அந்தோ! அவர்கள் செய்த ஆறாத்துயர் விளைவிக்கும் அநீதச் செயலை எவ்வாறு தமிழ் எழுத்தால் எழுதுவது. அந்தக் கொடுமை நிறைந்த செயலை நினைக்கும் போதே கண்களில் நீர் பெருகுகிறது"என்று ந.சஞ்சீவி குறிப்பிடுகின்றார் (ப. எ- 59)

மாவீரர் மருது பாண்டியர் என்னும் நூலில், "போராட்டமும் தியாகமும் இன்னும் முடிவடையாத ஏகாதி பத்திய எதிர்ப்புப் போரின் ஏற்ற மிகுபோர்க் கொடியாக விளங்கி வருகின்றன" என்று எஸ் எம் கமால் குறிப்பிடுகின்றார் (ப.எ- 192)

தன் மண்ணிற்காக போராடி பல துயர்களை அனுபவித்து வீர மரணம் அடைந்த தியாகிகள் அனைவரும் பல யுகம் கடப்பினும் சரித்திரமாக நம் மண்ணில் உயர்ந்த இடத்தை பெறுவது என்பது உறுதியாகும்.

**முடிவுரை**

ஆங்கிலேயர்களை எதிர்த்து அனைத்து புரட்சியாளர்களும் ஒன்றுப்பட்டனர் எனவே அவர்களின் எதிர்ப்பு உறுதியாக இருந்தது. காளையார் கோயில் காடுகளில் நான்கு திசைகளிலும் மறைந்திருந்து கொரிலா முறைப்படி எதிர்க்கத் தொடங்கினார். இத்தகைய சிறப்பு வாய்ந்த காளையார் கோயில் போரானது வஞ்சகர்களாலும், சூழ்ச்சியினாலும் வீழ்ச்சியுற்ற தன்மையையும், ஒற்றுமை இல்லாத சுய நலம் மிக்கவர்கள் அயல் நாட்டவர்களுக்கு துணைநின்ற தால் ஏற்பட்ட உயிரிழப்புகளையும் இந்த ஆய்வுக்கட்டுரையின் வாயிலாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

**துணைநின்ற நூல்கள்**

1. இராம கிருட்டிணன். இரா - தகடூர் வரலாறும் பண்பாடும், ஜி-4, சாந்தி அடுக்ககம், ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை, சென்னை - 600014 ராமையா பதிப்பகம், முதல் பதிப்பு -2008.

2. கமார். எஸ். எம் - மாவீரர் மருது பாண்டியர் முதல் பதிப்பு - அக்டோபர் *1989* வெளியீடு - காவ்யா *16,* இரண்டாம் குறுக்குத் தெரு டிரஸ்ட்புரம், கோடம் பாக்கம், சென்னை - *600024.*
3. சஞ்சீவி. ந - மானங்காத்த மருது பாண்டியர், முதல் பதிப்பு - ஆகஸ்ட் *2004* வெளியீடு - காவ்யா, *16,* இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை - *600024 .*
4. சஞ்சீவி. ந, கிருட்டிணா சஞ்சீவி - கால்டு வெல் திருநெல்வேலி சரித்திரம் (மொழியாக்க நூல்) முதல் பதிப்பு - டிசம்பர்- *2004,* வெளியீடு - காவ்யா, *16,* இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை- *600024.*
5. சண்முகசுந்தரம். சு - காவ்யா தமிழ் ஆய்விதழ், அக்டோபர் - *2022,* மார்ச் *-2023,* கலை, இலக்கியம், பண்பாட்டு பண்ணாட்டுக் காலாண்டிதழ், ISSN & *2277-922.*
6. பார்த்தசாரதி. நா - சரித்திர சிறுகதைகள், முதல் பதிப்பு *-2016,* சீதை பதிப்பகம், *4/7,* ராஜாஅனுமந்த தெரு, திருவல்லிக்கேணி, சென்னை- *05.* ISBN& *978 -93- 82689- 62-1.*
7. ராஜேந்திரன்.மு *- 1801,*அகநிவெளியீடு, முதற் பதிப்பு - டிசம்பர் *2016.*